பார்க்கப்படுகிறார்களோ அதைப்போல சம்பள உயர்வு, மருத்துவ உதவி இவையெல்லாம் அவர்களுக்குக் கிடைக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை நான் ஆட்சேபிக்கவில்லை, அதற்குவேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிற அடிப்படையில் 1—5—1966-ல், 3—5—1966-ல் தஞ்சாவூரில் மார்க்கெட் கமிட்டித் தலைவர்களும், உபதலைவர்களும், செயலாளர்களும் மாநாடு கூடி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறார்கள். ஒவ்வொரு ஊழியருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 75 ரூபாய் மேற்கொண்டு வழங்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி விவசாயத்துறை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பினார்கள். அதைப் பரிசீலனை செய்து அவர்கள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்கள். சர்க்கார் அதைப் பரிவோடு கவனித்துக்கொண்டிருக்கிறது. அது இல்லை என்பது அர்த்தம் இல்லை. அவர்களுடைய பிரச்சனை கவனத்தில் இருந்து வருகிறது. விரைவிலே அதைப்பற்றிய முடிவு எடுக்கப்படும்.

தொழிலாளர் கல்வித் திட்டம்

*** 356 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் உள்ள நூற்பு ஆலைகளில் 'தொழிலாளர் கல்வித் திட்டம், எத்தனை ஆலைகளில் அமுல் நடத்தப்பட்டுள்ளது ?

(இ) மதுரையில் உள்ள சில ஆலைகளில் நடத்தப்பட்டு வந்த இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) தமிழகத்தில் 98 நூற்பு ஆலைகளில் தொழிலாளர் கல்வித்திட்டம் அமுல் நடத்தப்பட்டுள்ளது.

(இ) நூற்புத் தொழிலில் உள்ள பொருளாதார மந்த நிலையின் காரணமாக ஆலை நிர்வாகிகள் தொழிலாளர் கல்வித் திட்டத்திற்கு தற்பொழுது போதுமான ஊக்கம் அளிப்பதற்கு வசதியில்லாதிருப்பதால் மதுரையில் சில ஆலைகளில் இத்திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் கல்வித் திட்டம் மிகப் பயன் அளிக்கக்கூடிய திட்டம். இனிமேலாவது அந்த முறையிலே தொடர்ந்து கல்வியளிப்பதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மத்திய அரசு அமைத்த திட்டம். மாநில அரசின் ஒத்துழைப்போடு முத்தரப்பினரும் ஈடுபட்டு நடத்தி வருகிறார்கள். கட்டாயப் படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு யோசனை இல்லை.

1968 மார்ச் 28]

திரு. ஜே. ஜேம்ஸ் : தொழிலாளர் கல்வித் திட்டம் மூலமாக அங்கங்கே சில தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு மீண்டும், மீண்டும் அங்கங்கே வகுப்புகள் நடத்தி எல்லாத் தொழிலாளர்களுமே இந்தத் திட்டத்தின் பயனைப் பெறக்கூடிய வகையில் அரசாங்கம் திட்டம் வகுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுது அந்தத் திட்டம் இல்லை.

திரு. மா. பா. சாரதி : தலைவர் அவர்களே, நமது சர்க்கார் நடத்தும் எல்லா கூட்டுறவு நூற்பாலைகளிலும் இந்தக் கல்வித் திட்டத்தை விஸ்தரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் விஸ்தரிக்கப்படுகிறது.

திருச்சி நகரத்திற்கு சாக்கடை அமைப்புத் திட்டம்

*357 வினா.—**திரு. வை. சுவாமிநாதன்** : மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

(இ) அதற்காக அரசாங்கம் கடனாகவோ, மான்யமாகவோ எவ்வளவு கொடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) & (இ) : திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்திற்கு புலனாய்வு வேலைகள் முடிந்துவிட்டன. இந்தத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரால் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் அளித்த பிறகு இந்தத் திட்டம் நிதி நிலைமையைப் பொறுத்து வேலை துவங்கப்படும்.

திட்டத்திற்குப் பண உதவி கொடுப்பதுபற்றி ஒப்புதல் அளிக்கும் சமயம் கவனிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, நெடுங்காலப் பிரச்சனையாக இருந்துவருகிற இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை அரசாங்கம் முழு முயற்சி செய்து விரைவிலே நிறைவேற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. நா. காசிராமன் : சார், திருச்சிக்கு உண்டான இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்செய்யும்பொழுது அந்தச் சாக்கடையிலிருந்து வரும் கழிவு நீரைக்கொண்டு புல், கறிகாய்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தையும் இந்தத் திட்டத்தோடு கையோடு சேர்த்துப் போடுவதன் மூலம் இந்தச் சாக்கடை